**HAPPY FAMILIES**

Good to Great Family

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்

புதியதோர் உலகம் செய்வோம்

# WE NEED 1,00,000 EDUCATED BOYS AND GIRLS TO DEVELOP THEIR FAMILIES, OUR SOCIETY, OUR ENVIRONMENT AND THE COUNTRY

सत्यमेव जयते

I.N.D.I.A TRUST Registered with

National Career Service

सही अवसर, सही समय

Right Opportunities, Right Time

Ministry of Labour & Employment

GOVT OF INDIA

NCS ID : S13A65-1700440409739

I.N.D.I.A. TRUST

BUILDING PEOPLE BUILDING INDIA

**Prof. A. Vijaya Kumar**

Chief Mentor - Founder President

I.N.D.I.A. TRUST is a nodal Centre for

ENTREPRENEURSHIP DEVELOPMENT INSTITUTE OF INDIA - E D I I

For the states of

Tamil Nadu, Kerala, Andhra & Pondicherry

E D I I is SPONSORED BY

Friedrich - Naumann - Stiftung, Germany

SUPPORTED BY

Human Resources Development Ministry

Commmissinerate and Directorate of Small Scale Industries

National Science & Technology Entrepreneurship Development Board

Department of Science & Technology (Govt. of INDIA)

FORMERLY INTERNATIONAL ASSOCIATE PARTNER

UNIVERSITY OF CAMBRIDGE (UK)

**CHARACTER FOR NATION**

*Character Makes a Man...*

*Men of Character Make a Nation...*

National Skill Development Mission

**E3**

ENGLISH LANGUAGE

EMPLOYABILITY SKILLS

ENTREPRENEURSHIP

**M E R I T**

Movement for Educational Reformation In Tamilnadu

**I**nternational **D**iploma in **E**ducation and **A**cademic **L**eadership

**G**raduate **E**ntrepreneurship **T**raining of **I**ndia **T**rust

www.indiatrustgetit.com

**We cannot prepare the future for our youth**
**But we can always prepare our youth for the future.**

தமிழ்நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பள்ளிகளிலும் மற்றும் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் படித்துக் கொண்டிருக்கும் இலட்சக்கணக்கான மாணவர்களில் ஒருவரா நீங்கள் !

அல்லது படித்து முடித்து விட்டு படிப்புக்கேற்ற வேலை கிடைக்காமல், வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, வேலை கிடைக்காமல், அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருப்பவரா நீங்கள்!

கற்ற கல்வியை வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பயன்படுமாறு அமைத்துக் கொண்டு, இலட்சியப் பாதையில் வெற்றிகரமாக நடைபோட வேண்டும் என்று வெறும் கனவு மட்டுமே கண்டு கொண்டு இருக்கும் இலட்சகணக்கான பட்டதாரி இளைஞர்களில் ஒருவரா நீங்கள்!

மேற்கண்டவாறு வாழ்ந்து கொண்டிருந்த 25 இலட்சத்திற்கும் மேலான தமிழக இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றி அமைத்து அவர்களது வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி கொடுத்துக் கொண்டிருக்கிறது இந்தியா டிரஸ்ட்.

## இன்றைய பட்டதாரி இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேற இயலாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன?

- **LACK OF PERSONALITY**
- **LACK OF TECHNICAL SKILLS**
- **LACK OF COMMUNICATION SKILLS**
- **LACK OF LEADERSHIP SKILLS**
- **LACK OF CONFIDENCE**
- **RURAL BACKGROUND**
- **INFERIORITY COMPLEX**
- **NEGATIVE MENTAL ATTITUDE**
- **LACK OF SELF MANAGEMENT SKILLS**
- **LACK OF SELF MOTIVATION**
- **LACK OF JOB KNOWLEDGE**
- **NO PROPER GUIDANCE**
- **NO ENCOURAGEMENT**
- **NO EXPOSURE**

மேற்கண்ட காரணங்கள் மட்டுமல்லாமல் பல நூற்றுக்கணக்கான காரணங்கள் இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு தடைக் கற்களாக இருக்கலாம். ஆனால் இத்தடைகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து வாழ்க்கையில் முன்னேறி, தன்னையும் தன்னை வளர்த்த குடும்பத்தையும், தன்னைச் சார்ந்த சமுதாயத்தையும், உயர்த்த வேண்டும் என்று ஒவ்வொரு இளைஞனும் இலட்சியக் கனவுடன் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறான்.

இந்திய டிரஸ்ட்டும், INDIA TRUST.UNIVERSITY நிறுவனமும் இணைந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்து ஒரு லட்சம் மாணவர்களை தேர்ந்தெடுத்து அவர்களது வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், வேலை வாய்ப்புக்கான திறன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், சுயதொழில் செய்வதற்கான மேலாண்மை பயிற்சியை அளிப்பதற்க்கும், இத்திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இனி வரும் பக்கங்களில் நீங்கள் காணப்போகும் கருத்துக்களை சற்று கவனித்து உங்களது மனதில் ஏற்றுக் கொள்ளுங்கள். அதில் வரும் கதைகளும், அறிவுப்பூர்வமான விஷயங்களும் நீங்கள் அமைக்கப்போகும் வெற்றிப்படிகளுக்கு உறுதியான தூண்களாக அமையும்.

இந்திய தேசத்தை ஒரு வல்லரசு நாடாக மாற்றத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனையும் நாங்கள் வருக வருக என வரவேற்கிறோம்.

**வாருங்கள் ! வளர்ச்சிப்பணியில் ஈடுபடுங்கள்!வெற்றி வாகை சூடுங்கள்!!**

---

❖ இன்று நமது நாடு அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கல்வி, தொழில், வேளாண்மை முதலான பல்வேறு துறைகளில் மிக வேகமாக வளர்ந்து கொண்டு, உலக நாடுகளிடையே முன்னிலையில் நிற்கிறது.

❖ வளர்ந்து வரும் பல்வேறு நாடுகள் இன்று இந்தியாவின் தலைமையை எதிர்நோக்கி நிற்கின்றன.

❖ பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் சர்வதேச வல்லமை படைத்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அவ்வல்லமையைத் தொடர்ந்து காப்பதற்கும், அதை மென்மேலும் பெருக்குவதற்கும்,நாட்டின் எதிர்காலத்தை தலைமை ஏற்று நடத்துவதற்குமான திறம்பாடுகளை இன்றைய இளைஞர்கள் தகுந்த முறையில் பெற்றுள்ளனரா?

❖ அவர்கள் கற்ற கல்வியும், பெற்ற அறிவும், இந்நாட்டின் வளர்ச்சிக்கு எல்லாக் கோணங்களிலும் பயன்படுகின்றனவா?

❖ நாட்டையும், வீட்டையும் இணைக்கும் இந்த வெற்றிப் பாலத்தில் பீடு நடையிட்டுச் செல்ல இன்றைய இந்திய இளைஞர்கள் தகுதியானவர் களாகவும், பொருத்தமானவர்களாகவும் வலிமையுடையவர்களாகவும் இருக்கின்றார்களா?

❖ 70 ஆண்டுகளுக்கு முன் நாம் சுதந்திரம் அடையும்போது விரல் விட்டு எண்ணக்கூடிய சில பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பள்ளிகளும் மட்டுமே இருந்தன.

- ஆனால் இன்று 1000க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிவியல், கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், இலட்சக்கணக்கான பள்ளிக்கூடங்கள், கோடிக் கணக்கான ஆசிரியர்கள் கொண்ட மிகப் பெரிய கல்வி நாடாக உருவாக்கியுள்ளோம்.
- ஒவ்வொரு வருடமும் 25 இலட்சம் இளைஞர்கள் தொழில்நுட்பத் துறைகளிலிருந்தும், 75 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அறிவியல் மற்றும் கலைத் துறைகளிலிருந்தும் படித்து முடித்துவிட்டுப் பட்டதாரிகளாகக் கல்வி உலகிலிருந்து வெளியே வருகின்றார்கள்.

## இவர்களது எதிர்காலம் என்ன?

- இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிக்கும் விசன் 2020 குழு இந்தியாவில் இன்னும் 10 வருடங்களில் 20 கோடி இளைஞர்கள் வேலை இல்லாதவர்களாகவும், வேலைக்குத் தகுதியும் பொருத்தமும் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள், என்று கூறுகிறது.
- சுதந்திர இந்தியாவின் இந்த 70 ஆண்டுகால கட்டத்தில் எத்தனையோ பத்திரிகைகளும், மாமேதைகளும், எழுத்தாளர்களும், சான்றோர்களும், கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும், திட்ட அமைப்பாளர்களும் இப்பிரச்சனையைப் பற்றி ஆராய்ந்து அதற்குரிய தீர்வுகளைக் காண முயற்சி செய்திருக்கிறார்கள்.
- ஆனால் பட்டதாரி இளைஞர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் இந்த மாபெரும் பிரச்னைக்குத் தீர்வு காண முடிந்ததா? முடியுமா?

**நம்மால் முடியும்!**

**உங்களால் முடியும்!!**

**எங்களால் முடியும்!!!**

## நமது நாட்டு இளைஞர்களை பாதித்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வரும் வழிமுறைகள் என்ன?

1. தன்னம்பிக்கை ஊட்டுதல்
2. தனி நபருக்கு ஏற்ற வழிகாட்டுதல்
3. தாழ்வு மனப்பான்மையைப் போக்குதல்
4. உயர்ந்த சிந்தனைகளுடன் கூடிய தலைமை மனப்பான்மை அளித்தல்
5. தவறான எண்ணங்களைப் போக்கி, சரியான முறையில் சிந்திக்க வைத்தல்.
6. வெற்றிகரமான மனிதர்களைச் சந்திக்க வைத்தல்
7. கல்வி அறிவுக்கும் - தொழில் நிர்வாக சிந்தனைக்கும் தொடர்பு ஏற்படுத்துல்.
8. சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் ஆங்கிலத்திலும், தாய்மொழியிலும் பேச வைத்தல்.
9. கல்வி கற்கும் போதே சுயமாகப் அல்லது பிறகும் கூட வருமானம் ஈட்டுதல்.
10. சமுதாயம் பொறுப்புணர்வுடைய சுய தொழிலில் ஈடுபடுத்துதல்
11. திடகாத்திரமான ஆரோக்கியம் அளித்தல்
12. அறிவு, ஆற்றல், உணர்வு, ஆன்மீகம் இவற்றைஒருங்கிணைத்தல்

---

## “ தனியொரு மனிதனுக்கு உணவில்லையேல் இஜ்ஜகத்தனைஅழித்திடுவோம்”

என்று கூறிச் சென்றார் தேசியகவி பாரதி. இன்று இந்தியாவின் வளர்ச்சியால் உணவு, உடை, உறைவிடம்,பெரும்பான்மையோர்களுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. அதனால் பாரதி கூறிய அக்கூற்றைச் சற்றே மாற்றியமைத்துப் பார்ப்போம்.

## "தனியொரு மனிதனுக்கு உயர்வில்லையேல்...."

இன்று நமது நாட்டின் ஒவ்வொரு இளைஞனுக்கும் உயர்வை அளிக்க வேண்டிய பொறுப்பை எடுத்துக் கொள்வது யார்?

---

| | | |
|---|---|---|
| அரசாங்கமா? | கல்லூரிகளா? | தொழில்துறை நிறுவனங்களா? |
| சமுதாயமா? | பல்கலைக் கழகங்களா? | தலைவர்களா? |
| பத்திரிக்கைத்துறையா? | பெற்றோர்களா? | தனிமனித வழிகாட்டிகளா? |

---

இவர்கள் யாவரையும் ஒருங்கிணைக்கும் ஒரு திட்டம், அந்த ஒன்றிணைத்த சக்தியால், பல இலட்சம் இளைஞர்களின் வாழ்க்கையில் வளத்தையும், வலிமையையும், வெற்றியையும் வழங்கும் ஒரு திட்டம்.நமது திட்டம்.

இந்தியாவில் அதுவும் நமது தமிழகத்தில் முதன் முறையாக இந்த திட்டத்தை செயல்படுத்த வருகிறது INDIA TRUST.UNIVERSITY. இவ்வுலக நாடுகளிடையே மிக உயர்ந்த தேசமாக நமது இந்திய நாடு திகழ வேண்டும் என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் எங்கள்திட்டம் சமர்ப்பணம் செய்யப்படுகிறது.

இளைஞர்களே இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் அந்த வேதவாக்கத்திற்கு உயிர் கொடுக்க உருவாகியதே எங்கள் திட்டம்.

---

நாங்கள் ஒரு லட்சம் சமூகப் பொறுப்புள்ள இளைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மாற்றி அமைக்க உறுதி பூண்டுள்ளோம்.

தனது வீட்டை மாற்றியமைக்கும் இந்த ஒரு லட்சம் இளைஞர்கள் இந்த நாட்டின் தலைவிதியையும் மாற்றி அமைப்பார்கள் என நம்புகிறோம்.

**வலிமையான இளைஞன்! - வளரும் சமுதாயம்!!**
**வளமான பாரதம்!!!**

# 20 TRAINING MODULES

| | |
|---|---|
| 1. சுயமேம்பாடு வளர்ச்சித் திறமைகள் | Personal Success Skills |
| 2. மற்றொருவருடன் பழகும் மற்றும் தகவல் தொடர்பு திறன் | Interpersonal & Communication Skills |
| 3. கால நிர்வாக மேலாண்மை - குறிக்கோள் திட்டமிடுதல் | Time Management – Goal Setting |
| 4. கிராமபுற முன்னேற்றம் | Rural Development Technology |
| 5. ஒருங்கிணைந்த ஆளுமை மேலாண்மை | Integrated Personality Management |
| 6. குடும்பம்-சமூகம்-கலாச்சாரம்-பண்பாடு இவைகளின் தாக்கம் | Family, Social & Cultural Influences |
| 7. வெற்றிகரமான பழக்க வழக்கங்கள் | Successful Habits |
| 8. தரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வது | Quality of work |
| 9. தனியாகவும், குழுக்களுடனும் பணி புரியும்திறன் | Group Dynamics |
| 10. மனிதவள மேம்பாடு-மனித ஆற்றல் மேம்பாடு | HRD & Human PotentialDevelopment |
| 11. கலந்தாலோசிக்கும் திறன் | Counseling & Mentoring |
| 12.அகவாழ்க்கை-புறவாழ்க்கை சித்தாந்தங்கள் | Psycho Graphics |
| 13. பொது மக்கள் தொடர்பு | Public Relations |
| 14. உயர்வுப்பூர்வமான அறிவுத் திறன் | Emotional Intelligence |
| 15. தலைமை மனப்பான்மை | Leadership Skills |
| 16. சிந்திக்கும் திறன் | Creative & Thinking Skills |
| 17. சமூகப் பொறுப்புணர்வு | Social Responsibilities & Business Ethics |
| 18. தொழில் முனைவோருக்கான திறன்பாடுகள் | Entrepreneurship Skills |
| 19. வேலைவாய்ப்புக்கான திறன்பாடுகள் | Employability Skills Sense |
| 20. வாழ்க்கை முன்னேற்றக் கல்வி | Life Successful Skills |

**இணையதளம்: (Website) : indiatrust.university**

**1000 பக்கங்கள் கொண்டது- இளைய சமுதாயத்தை ஊக்கு விக்கும் கதைகள் மற்றும் கட்டுரைகள். 50 சுய திறனாய்வுத் தேர்வுகள்.**

# நாடு.. அதை நாடு...

படிச்ச படிப்புக்கு வேலை கெடைக்கலே! பட்டம் வாங்கியும் கஷ்டம் போகலே! இது தான் உங்கள் தேசிய கீதமா? கவலையை விடுங்கள்! பட்டப்படிப்பு என்பது உங்கள் கல்வித் தகுதி மட்டுமே. பெருகி வரும் வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளுக்குப் பொருத்தமான ஆளாக உங்களைச் செதுக்கிக் கொண்டால், வருத்தங்கள் பறந்து போய்விடும் என்ற புதிய வெற்றிக்கான வாய்ப்புச் சிந்தனையை முன் வைக்கிறார். INDIA TRUST (Integrated National Development In Action Trust) தலைவர், INDIA TRUST.UNIVERSITYயின் CEO, கல்வியாளர் ஆ.விஜயகுமார்.

## கூண்டைவிட்டு வெளியே வா!

குட்டி ஒட்டகம் தன் தாயைப் பார்த்துக் கேட்டது. அம்மா! நமது கால்கள் மட்டும் ஏன் இத்தனை நீளம்?" "பாலைவன மணலில் புதைந்து கொள்ளும் கால்களை எடுத்து எடுத்து வைத்து நடக்க, இறைவன் நமக்குக் கொடுத்த வரும்!" தாய் ஒட்டகம் தடுமாறாமல் பதில் சொன்னது. நமக்கு மட்டும் ஏன் இத்தனைத் தடிமனாக இமைகள்?" "பாலைவனத்தில் அடிக்கடி மணல் புயல் அடிக்கும். அதிலிருந்து நம் கண்களைக் காத்துக் கொள்ள கடவுள் தந்த பரிசு!" தாயின் பதிலில் துள்ளிய குட்டி ஒட்டகம் கடைசியாய் கேட்டது. "நமக்கு மட்டும் எதற்கம்மா முதுகில் கூன்?" "கூன் நமக்கு ஊனமல்ல; பாலைவனத்தில் தண்ணீர் கிடையாது. தண்ணீரை மொத்தமாய்ச் சேர்த்து வைத்துக் கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாய்குடிப்பதற்காகக் கடவுள் நமக்குத் தந்த கொடை!"

சிலிர்த்த குட்டி ஒட்டகம் உடலை ஒரு முறை குலுக்கிக் கொண்டு கேட்டது, "அப்புறம் ஏனம்மா இத்தனை வருடங்களாக நாம் இந்த மிருகக் காட்சி சாலையில் அடைபட்டுக்கிடக்கிறோம்?"

இந்த ஒட்டகங்களைப் போலத்தான் பெரும்பாலான இளைஞர்கள், திறமையிருந்தும் கூண்டை விட்டு வெளியே வரத் தயங்குகிறார்கள். வெளியே வந்தாலும், அணுகுமுறை அறியாமல், முதல் தோல்வியோடு முடங்கி விடுகிறார்கள். ஒரு வேலைக்குப் பல நூறு பேர் முயற்சி செய்வதைப் பார்த்து, அதிர்ச்சி கொள்கிறார்கள். "பாவம் பையன், நல்லா படிச்சிருக்கான், வேலைதான் கிடைக்கலே!" என்கிற பரிதாபங்களில் குளிர்காய்கிறார்கள், வேலை கிடைக்கவில்லை என்பவன் கோழை! ஆனால் இங்கே எல்லோருக்கும் இருக்கிறதா வேலை?

## வேலைக்குத் தரும் விலை!

There is always a right job, at the right time, for the right person.இது உலகத் தத்துவம். எனக்கு வேலை கிடைக்கவில்லை என்று ஓர் இளைஞன் நினைத்தால், நிச்சயமாக அவன் இளைஞர் பட்டாளத்தில் wrong person ஆகத்தான் இருப்பான். வேலை இல்லாத் திண்டாட்டம் என்ற பிரச்சனை நம் கண்களுக்கு நாட்டையே விழுங்கும் பூதம் போலத் தெரிகிறது. இன்றைய இளைஞர்களை wrong person களாக உருவாக்கியது யார்? அடித்துச் சொல்லலாம், நமது கல்வித் திட்டம் என்று.

பாலகனாக எல்.கே.ஜி. வகுப்பில் நுழைந்து, பதினேழு ஆண்டுகள் படித்து பட்டதாரியாக வெளியே வரும் இளைஞனை, ஒரு வேலைக்குத் தகுதியானவனாக உருவாக்காதது கல்வி முறையின் குற்றமென்றால், பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இதில் பங்கு உண்டா? இன்றைய இளைஞன் ஒரு நல்ல வேலைக்கு, தர வேண்டிய விலைதான் என்ன?

## தவளை போன்றதா இளைஞனின் நிலைமை?

ஒரு விஞ்ஞானி, தவளைக்குக் காது கேட்குமா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். கண்ணாடிப் பெட்டியிலிருந்து அதை வெளியே எடுத்து, மேஜை மீது வைத்து குதி குதி என்றார். குதித்து. முன்னங்கால்களில் ஒன்றையும் வெட்டிய பிறகும் குதித்தது. இறுதியாக எஞ்சியிருந்த நான்காவது காலை வெட்டிவிட்டு குதிக்கச் சொன்னார். தவளையால் குதிக்க முடியவில்லை. நான்கு கால்களையும் வெட்டிவிட்டால், தவளைக்குக் காது கேட்காது என்று அந்த விஞ்ஞானி குறிப்பெழுதிக் கொண்டார். காலை வெட்டுவதற்கும், தவளையின் காது கேட்பதற்கும் சம்பந்தமில்லை என்பது ஒரு புறம் இருக்க, நான்கு கால்களையும் வெட்டிவிட்டால் தவளை எப்படிக் குதிக்கும்? இந்தத் தவளையின் நிலைதான் இன்றைய இளைஞனுக்கும். முதல் காலை வெட்டியது கல்விமுறை என்றால் இரண்டாவது, மூன்றாவது கால்களைத் துண்டித்தவர்கள்? பெற்றோர், ஆசிரியர், கல்வி முறை, இளைஞன் இந்த நால்வரும் இணைந்தால் தான், ஒரு திறமையான மனிதனை உருவாக்க முடியும். முதலில் திருந்த வேண்டியது அல்லது திருத்த வேண்டியது யாரை? எதை?

## திணற வேண்டாம்! உணருங்கள்!!

பிள்ளைகளின் கல்விக்குக் கடன் வாங்கியாவது செலவு செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் பிள்ளைகளை நல்லவர்களாகவும் வல்லவர்களாவும் வளர்க்க, தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்களா? என்று கேள்வி எழுந்தால், பதில் இல்லை. இது தான் தலைமுறை இடைவெளி?

எத்தனை மாணவர்கள் கல்லூரியைவிட்டு வெளியே வரும்போது தன்னம்பிக்கையோடு வருகிறார்கள்? எத்தனை பேர் அங்கு தலைமைப்பண்மை கற்றுக் கொண்டார்கள்? இதையெல்லாம் ஊட்ட வேண்டியவர்கள் ஆசிரியர்கள்தாமே? கல்வித் திட்டம் என்பது வெறும் சிலபஸ் மற்றும் பாடங்களை ஓதுவது மட்டுமல்ல. ஒரு மாணவனை உருவாக்குவதில், ஆசிரியர்களின் பங்களிப்பும் இணைந்ததாக இருக்க வேண்டும். அந்தக் காலத்து ஆசிரியர் பயிற்சியை வைத்துக் கொண்டு இந்த காலத்து மாணவர்களை எதிர்காலத்திற்காக எப்படி உருவாக்க முடியும்? காலந்தோறும் ஆசிரியர்கள் பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்? எனவே திணறுவதை விடுத்து, பெற்றோர், ஆசிரியர் இருவருக்குமே இன்று பயிற்சி அவசியம் என்பதை உடனடியாக உணர வேண்டும். இதற்கு மனித வள மேம்பாட்டுத் துறை ஓர் அற்புதத் தீர்வாக அமையும்.

## மனித வள மாயாஜாலம்!

ஒவ்வொரு தொழிற்சாலையிலும், அலுவலகங்களிலும் ஒரு மனிதவள மேம்பாட்டு அதிகாரி இருக்கிறார். அங்கே அவரது வேலை என்ன தெரியுமா? ஊழியர்களுக்கு ஊதியம் சரியா வருகிறதா? அலுவலக, தொழிலாகச் சூழலில் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் சரிவர இயங்குகின்றனவா? ஒழுங்காக வேலை செய்கிறார்களா?

அலுவலக, தொழிலாகச் சூழலில் அவர்களுக்கான அடிப்படை வசதிகள் சரிவர இயங்குகின்றனவா? ஒழுங்காக வேலை செய்கிறார்களா? உற்பத்தியில் புதிய தொழில் நுட்பம் புகுத்தப்பட்டால், அதற்குப் பயிற்சி எடுத்துக் கொண்டார்களா? என்று கண்காணிக்கிறார். நடவடிக்கை எடுக்கிறார். ஆனால், மாணவர்களை உருவாக்கும் கல்வி நிறுவனங்களில், ஏன் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் இல்லை? ஒவ்வொரு கல்வி நிறுவனத்திலும் ஒரு HRD அலுவலர் இருந்தால், அவர் எப்படி இயங்க முடியும் என்பதை பாருங்களேன்!

ஆசிரியர்கள் - பெற்றோர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யலாம். ஆண்டு தோறும் ஆசிரியர்களை பயிற்சிப் பட்டறைகளுக்கு அனுப்பி, அவர்களது திறனை மேம்படுத்தலாம். மாணவர்களிடம் தனிப்பண்புகளை உருவாக்க, படிப்போடு பிரத்யோக பயிற்சிகளுக்கும் HRDஅலுவலர் என்று நியமித்தால், லட்சக் கணக்கானவர்களுக்கு வேலை தர முடியும். இதன் மூலம் தரமான மனித வள சக்தியை உருவாக்கிட முடியும். சுயதொழில் சிந்தனையைத் தூண்டிவிடுவதிலும் மனித வளப் பயிற்சி மாயா ஜாலம் செயல்படும்.

## தடுக்கும் பெற்றோர் தடுமாறும் இளைஞர்!

இன்றைய இளைய சமுதாயத்தின் மத்தியில் மூன்று வகையான வேலைவாய்ப்புச் சிந்தனைகள் இருக்கின்றன. இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் என்றால் கூடப் பரவாயில்லை. ஆனால் அது ஏசி அறையில் அமர்ந்து செய்கிற ஒயிட் காலர் ஜாப்பாக இருக்க வேண்டும் என்பது ஒரு ரகம். இரண்டாயிரம் எல்லாம் எந்த மூலைக்கு? கைநிறையச் சம்பாதிக்க வேண்டும். அப்பா அம்மாவை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கு சொந்த பிசினஸ் தான் சரி என்று நினைப்பது இரண்டாவது ரகம் இந்த ரகத்தினர் ப்ளஸ் டூ முடித்தவுடன், "நான் பகுதி நேரப் பட்டப்படிப்பில் சேரப் போகிறேன். மீதி நேரத்தில் சுய தொழில் செய்யப்போகிறேன்"

இந்த ரகத்தினர் ப்ளஸ் டூ முடித்தவுடன், "நான் பகுதி நேரப் பட்டப்படிப்பில் சேரப் போகிறேன். மீதி நேரத்தில் சுய தொழில் செய்யப்போகிறேன்" என்று சொன்னால், அதெல்லாம் முடியாது என்று அந்தக் கணமே பெற்றோர் தடை போடுவார்கள். "உத்தியோகம் புருஷலட்சணம்! ஒழுங்காகப் படித்து, ஒரு வேலையைத் தேடிக் கொள்" என்று தொழிலதிபர் கனவுகளை முளையிலேயே கிள்ளிப் போடுவார்கள்.

மூன்றாவது ரகத்தினர் இன்னும் நிறுவனங்களில் எப்படியாவது நுழைந்து விடலாம் என்று அந்த நிறுவனங்களில் வேலைக்குச் சேர நாம் பொருத்தமானவர்களா என்று சுய பரிசோதனை செய்து கொள்ள மாட்டார்கள். இங்குதான் தொடங்குகிறது தோல்வி.

## ஜாடிக்கேற்ற மூடியை தேடி....

சென்னைப் பல்கலைக் கழகத்தை எடுத்துக் கொள்வோம். இங்கே 100க்கும் மேற்பட்ட வகையான படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இங்கே மட்டுமில்லை. வேறு எந்தப் பல்கலைக்கழகத்தில் படித்துவிட்டு வெளியே வந்தாலும், படித்த படிப்பிற்குத் தகுந்த வேலை கிடைக்குமா வரலாறு படித்தவர்கள் எல்லாம் ஹிஸ்டோரியன் ஆகிவிட முடியுமா? பொருளாதாரம் படிக்கிறவர்கள் எக்னாமிஸ்ட் ஆகும் வாய்ப்பு கிடைக்கிறதா? இல்லை அப்படியானால் மாணவர்கள் என்ன செய்து, பெருகி வரும் வேலை வாய்ப்புகளுக்குப் பொருத்தமாகத் தங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்? இது என்ன புதுக்கதை என்கிறீர்களா?இது தான் இன்றைய நிலை.

தகுதி என்பது பதினேழு வருடப் படிப்பில் கிடைத்து விடுகிறது. ஆனால் பொருத்தம் என்பது இல்லை. ஒவ்வொரு தொழில் நிறுவனமும் வேலை தேடி வருபவனிடம் எதிர்பார்ப்பது பொருத்தமே தவிர, தகுதி மட்டும் இல்லை.

திருமணத்திற்கு வயது ஒரு தகுதி என்றாலும், ஜாதகப் பொருத்தம் இருந்தால்தானே வரன் கிடைக்கும்? இங்கே உத்தியோகம் புருஷலட்சணமல்ல. பொருத்த லட்சணம்! உங்களைப் பொருத்த மாணவராக மாற்றிக் கொள்ள முடியுமா?

## கண்ணனும் கவிதாவும், பீட்டரும் பேகமும்

கண்ணன் படித்தது பி.எஸ்.சி. கணிதம், ஆனால் ஃபோர்டு கார் தொழிற்சாலையில், ஒயரிங் பிரிவில் கண்காணிப்புப் பொறியாளர் பணியிடம் காலியாக இருந்தது, கடகடவென்று அடிப்படை மின்னியல், மோட்டார் ஒயரிங் தொடர்பான புத்தகங்கள் என்று படித்தான். தனக்கு தெரிந்த கார் பழுது நீக்கும் பட்டறைக்குச் சென்று, கார் ஒயரிங்கை நேரில் பார்த்தான், நம்பிக்கை வந்தது, கண்ணனின் பயோ டேட்டாவைப் பார்த்த ஃபோர்டு நிறுவனம், வியப்புடன் நேர்காணலுக்கு அழைத்தது. அவனது பொறியியல் அறிவைக் கண்டு வேலையில் அமர்த்தியது.

கண்ணனைப் போலத்தான் கவிதாவும், பி.ஏ கார்ப்ரேட் செக்கரட்டரிஷிப் படித்த கவிதா, இன்று தினசரிப் பத்திரிக்கையில் ஒரு வெற்றிகரமான நிருபர். கெமிஸ்ட்ரி பட்டம் பெற்ற ஜான்பீட்டர் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியொன்றில் பயிற்சி அதிகாரி ஃபைன் ஆர்ட்ஸ் படித்த ஜைனு பேகமோ, கடன் அட்டை வாடிக்கையாளர்களிடமிருந்து நிலுவைத் தொகையை வசூலிக்க மோட்டார் சைக்கிளில் மின்னலாய் வலம்வரும் ரெக்கவரி எக்ஸிக்யூட்டிவ். எப்படி முடிந்தது இவர்களால்? கிடைக்கும் வேலைக்குத் தகுந்த பொருத்தத்தை உணர்ந்து, அதற்குத் தகுந்த மாதிரி தங்கள் திறமைகள் வளர்த்துக் கொண்டதால் சாத்தியமானது. பொருத்தத்தைத் தரும் திறமைகள் என்று தனியே இருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது.

## வேண்டும் வெற்றிகரமான பழக்கங்கள்!

உங்கள் பொருத்தத்தை நிர்ணயிப்பவை, வெற்றிகரமான பழக்க வழக்கங்கள். கடிதம் எழுதுவது.தொலைபேசி மூலம் தொடர்புகளை வளர்ப்பது.

முக்கியமானவர்களைத் தெரிந்து வைத்துக் கொள்வது, நல்ல புத்தகங்களைத் தேடிப்படிப்பது. உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது, என்று பெரிய பட்டியலே போடலாம். இந்தப் பழக்க வழக்கங்களை நீங்கள் கடைபிடித்தால் தானாகவே உங்கள் ஆளுமை உயரும். நேர்காணலில் உங்கள் கூச்சம் போகும். தாழ்வு மனப்பான்மை தகர்ந்து போகும். நாகரீகமான உறுத்தாத உடை, உங்களின் உள்ளுணர்வில் உற்சாகத்தை நாள் முழுவதும் நிரப்பும்.

## தலைவா வா!

இன்று ஒவ்வொரு நிறுவனமும், பொருத்தமான இளைஞனிடம் தேடுவது தலைமைத்துவம், லீடர்ஷிப், இப்போது சாதாரண மனிதனாக இவனை எடுத்துக் கொள்கிறோம். ஆனால் இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து, இவன் பொறுப்பேற்றுக் கொண்ட துறையை இவனால் தலைமையேற்று நிர்வகிக்க முடியுமா? பிரச்சனை வந்தால் தீர்க்கும் திறன் உண்டா? வேலைப்பளு அழுத்தும் போது மனச்சோர்வு வந்தால், தாங்கும் தகுதி இருக்கிறதா என்பதையெல்லாம் எடை போட்டு பின் புடம் போட்டுத்தான் வேலைக்கு எடுப்பார்கள்.

## தாமே வேலைக்குத் தளம்

ஓர் இளைஞனிடம் தலைமைப் பண்பு வந்து விட்டது என்றால், அவனது எல்லா நடவடிக்கைகளிலும் தரம் வந்துவிடும். இங்கே தரம் என்பது இருவகை. ஒன்று நிறுவனத்தின் பாரம்பரியத் தரம். மற்றொன்று வேலை கோரும் இளைஞனிடம் அறிவு, ஆற்றல், உணர்வு இவை மூன்றும் இணைந்து செயலாற்ற வேண்டும். அறிவும், ஆற்றலும் இருந்து, உணர்வு இல்லாதவனை நிறுவனம் தேர்வு செய்து விட்டால், அவன் நிறுவனத்திற்கே நம்பிக்கை துரோகியாக மாறிவிடலாம். டீம் உணர்வுடன் இவனால் பணியாற்ற இயலுமா என்பதை அறிய, வேலை கோருபவனின் ஈகோ எல்லையைக் கணக்கிடத் தயங்க மாட்டார்கள். எனவே நமது ஈகோவின் தன்மை எத்தகையது என்பதை அறிந்து, அதைத் கூட்டவோ, மட்டுப்படுத்தவோ தெரிந்திருக்க வேண்டும்.

# INDIA TRUST. UNIVERSITY
# MANAGEMENT TRAINING MODULES

1. நிர்வாக முகாமைத்துவம் **(Administrative Management)**
2. கலைமுகாமைத்துவம் **(Arts Management)**
3. சங்க முகாமைத்துவம் **(Association Management)**
4. மாற்ற முகாமைத்துவம் **(Change Management)**
5. தொடர் பாடல் முகாமைத்துவம் **(Communication Management)**
6. கட்டுப்பாட்டு முகாமைத்துவம் **(Constraint Management)**
7. நெருக்கடி முகாமைத்துவம் **(Crisis Management)**
8. வாடிக்கையாளர் தொடர்பு முகாமைத்துவம் **(Customer Relationship Management)**
9. கல்வி முகாமைத்துவம் **(Educational Management)**
10. பயனுள்ள விற்பனை முகாமைத்துவம் **(Effective Sales Management)**
11. நிறுவன முகாமைத்துவம் **(Enterprise Management)**
12. சூழல் முகாமைத்துவம் **(Environmental Management)**
13. வசதி முகாமைத்துவம் **(Facility Management)**
14. நிதி முகாமைத்துவம் **(Financial Management)**
15. மனித பரஸ்பர முகாமைத்துவம் **(Human Interaction Management)**
16. மனிதவள முகாமைத்துவம் **(Human Resources Management)**
17. ஒருங்கிணைப்பு முகாமைத்துவம் **(Integration Management)**
18. இடைக்கால முகாமைத்துவம் **(Interim Management)**
19. அறிவு முகாமைத்துவம் **(Knowledge Management)**
20. தலைமை முகாமைத்துவம் **(Leadership Management)**
21. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் **(Marketing Management)**
22. அமைப்பு முகாமைத்துவம் **(Organization Development)**
23. கருத்து முகாமைத்துவம் **(Perception Management)**
24. கொள்முதல் முகாமைத்துவம் **(Procurement Management)**
25. திட்ட முகாமைத்துவம் **(Program/Project Management)**
26. செயல்முறை முகாமைத்துவம் **(Process Management)**
27. தன்னிறைவு, ஒழுக்கம், கடமை, ஈகை, அறிவு, அருள், சமாதானம், அன்பு, கருணை, ஆனந்தம்.

## CORPORATE PROFILE OF INDIA TRUST. UNIVERSITY

1. 15 years of sustainable Development and Growth in the service of common people's Economic and Social development.
2. Formost company in the country to bring world class homely product integrating
   - Quality
   - Health
   - Wellness
   - and Beauty
3. Over one lakh happy customers Through Ten thousand healthy business associates.
4. First company to create micro store concept and provide micro entrepreneurship opportunity to thousands of small and tiny business persons.
5. The goal of INDIA TRUST. UNIVERSITY for the year 2019 is to reach One million families and empower them for socio Economic Knowledge based Transformation.
6. First company to bring Education Training Development Research on Social And human capital management by setting up INDIA TRUST. UNIVERSITY INSTITUTE OF MARKETING AND MANAGEMENT.
7. First company to create MILLIONNAIRES CLUB OF INDIA TRUST. UNIVERSITY to develop one lakh millionnares among the middle-income group families.

# 10 VISIONS OF INDIA TRUST

1. வேலையில்லாதத் திண்டாட்டத்தைப் போக்க இளைஞர்களிடையே தொழில் முனைவோர்களை உருவாக்குவது - ENTREPRENEURSHIP

.........................................................................................

2. சராசரி திறமையுள்ள இளைஞர்களையும் வாழ்க்கையில் சிறந்த மனிதர்களாக உருவாக்குவது - HUMAN POTENTIAL MANAGEMENT

.........................................................................................

3. கல்வி போதனைகளில் தனி மனித வாழ்க்கை முன்னேற்றம்-சமுதாயம் மற்றும் தேசிய மேம்பாட்டு கருத்துக்களைக் கொண்டு வருதல் - EDUCATIONAL FOR NATION

.........................................................................................

4. ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளில் நமது நாடு அதிகமான வெற்றிகளைப் பெறுவதற்கு விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல் - SPORTS DEVELOPMENT

.........................................................................................

5. நமது நாட்டின் மனிதவளத் தரத்தையே நிர்ணயிக்கும் ஆசிரியர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு துணைபுரிதல் - TEACHERS' DEVELOPMENT.

.........................................................................................

6. தங்கள் குழந்தையின் முன்னேற்றத்திற்கு பக்க பலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு குழந்தை வளர்ப்பு முறைபற்றி சிறப்பான பயிற்சி அளித்தல் - PARENTING MANAGEMENT.

.........................................................................................

7. சர்வதேச வல்லமை படைத்துக் கொண்டிருக்கும் நமது நாட்டிற்கு தேவையான எதிர்கால தலைவர்களை எல்லாத் துறைகளிலும் உருவாக்குவது - NATIONAL LEADERSHIP SERVICE.

7. சர்வதேச வல்லமை படைத்துக் கொண்டிருக்கும் நமது நாட்டிற்கு தேவையான எதிர்கால தலைவர்களை எல்லாத் துறைகளிலும் உருவாக்குவது - NATIONAL LEADERSHIP SERVICE.

........................................................................................................................

8. அறிவு, ஆற்றல, திறமை மிக்க இளைஞர்களை நாட்டுப்பணி, சமுதாய மேம்பாட்டுப் பணி, கிராமப்புற வளர்ச்சிப் பணி போன்ற துறைகளில் ஈடுபடுத்தி பயிற்சிகொடுக்க உலகதரம் மிக்க பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல்-INDIA TRUST UNIVERSITY.

........................................................................................................................

9. வேளாண்மை துறையை இளைஞர்களை ஈர்க்கும் துறையாக மாற்றி விவசாய புரட்சி உருவாக்குதல்-AGRICULTURAL REVOLUTION.

........................................................................................................................

10. ஒவ்வொரு கல்லூரியிலும் பள்ளியிலும் HRD Centres-ஐ அரசு சாரா நிறுவனத்தின் அடிப்படையில் (N.G.O.) உருவாக்கி குழந்தைகள் மாணவர்கள் பெற்றோர்கள் பள்ளியைச் சார்ந்த சமுதாயத்தினர் இவர்களை சுற்றுப்புற மேம்பாட்டு பணிகளில் ஈடுபடுத்த வழிகாட்டுதல். இதற்கு துணைபுரிய வியாபார நிறுவனங்களை பங்கேற்க வைத்தல்-CORPORATE SOCIAL RESPONSIBILITY.

---


**TO KNOW MORE ABOUT US - CONTACT**

**PROF. AVK**

**Mob: 9500005541**

**R2, Santham Colony 13th Street,**

**Anna Nagar West Extension, Thirumangalam,**

**Chennai-600 101, Tamilnadu, INDIA.**

**E-mail: profavk2018@gmail.com**

**Web: www.indiatrust.university**


---